இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, அகில இலங்கை ஸ்ரீ சுமங்கல சமூகசேவைகள் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1993, செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

1993, செத்தெம்பர் மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IIஇற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60

தபாற் செலவு : ரூபா 1.00

1993 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, அகில இலங்கை ஸ்ரீ சுமங்கல சமூக சேவைகள் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்.

[1993 செப்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஏ. 37/92

**அகில இலங்கை ஸ்ரீ சுமங்கல சமூக சேவைகள் நலன்புரிச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

முன்னுரை.

"அகில இலங்கை ஸ்ரீ சுமங்கல சமூக சேவைகள் நலன்புரிச் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட சங்கத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டு நடாத்துவதற்குமென பித்தெனியவில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும்:

சொல்லப்பட்ட சங்கமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

ஆகவே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, அகில இலங்கை ஸ்ரீ சுமங்கல சமூக சேவைகள் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

அகில இலங்கை ஸ்ரீ சுமங்கல சமூக சேவைகள் நலன்புரிச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அகில இலங்கை ஸ்ரீ சுமங்கல சமூக சேவைகள் நலன்புரிச் சங்கத்தின் தற்போது உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இதன்மேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "அகில இலங்கை ஸ்ரீ சுமங்கல சமூக சேவைகள் நலன்புரிச் சங்கம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறு வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் அது கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) பாடசாலைகளிலிருந்து வெளியேறிய இளைஞர், யுவதிகளுக்காக மத ரீதியான சூழலில் சுயதொழில் பயிற்சிபெறும் கருத்துடன் பல்வேறுபட்ட பாடநெறிகளை நடாத்துவதற்கு தொழிற் பயிற்சி நிலையமொன்றைத் தாபித்துப் பேணுதல்;

(ஆ) சிறுவர் நலன் அத்துடன் புனர்வாழ்வு போன்ற சமூகசேவை நடவடிக்கைகளில் ஈடுபடுதல்;

(இ) இயற்கை அனர்த்தங்களினால் உள்ளக, வெள்ளவாரியாக ஏற்படுகின்ற இடையூறுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தலும், அவற்றிற்கு உதவியளித்தலும்;

(ஈ) காலத்திற்குக்காலம் சமய விழாக்களை ஒழுங்குபடுத்துதல்;

(உ) பௌத்தத்தைக் கற்பதிலும் பின்பற்றுவதிலும் அக்கறை கொண்டுள்ள எல்லா மக்களும் கூடுவதற்கான சர்வதேச பௌத்த நிலையமொன்றைத் தாபித்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடைமுறைப்படுத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக் கடனாகப் பெறவும் அல்லது திரட்டுவதற்கும், மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும், சேகரிப்பதற்கும், அதன் நிதியங்களை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை கொண்டுநடாத்துவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பனவற்றுக்கான தத்துவங்கள் உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்யவும் புரியவும் நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் அமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடியவர்களான பதவி தாங்குநர்களையும் அத்தகைய எண்ணிக்கையினரான வேறு ஆட்களையும் கொண்டமைந்த முகாமைச் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று பதவி வகிக்கின்ற கழகத்தின் முகாமைச் சபையாகவிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) கூட்டுத்தாபனமானது, அதன் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை வெளியேற்றுதல் என்பவற்றுக்காகவும், பதவி தாங்குநர்களையும் முகாமைச் சபையையும் தெரிவு செய்வதற்காகவும் பதவி தாங்குநர்களினதும் முகாமைச் சபையினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினதும் கடமைகளைப் புரிவதற்காகவும் கூட்டுத்தாபனத்தினதும் முகாமைச் சபையினதும் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைக்காகவும்,

பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல் அதன் குறிக்கோள்களை எய்தல் என்பவற்றிக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்கலாம். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதேமுறையிலும் அவை மாற்றப்படலாம், அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம், திருத்தப் படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள கழகத்தின் விதிகள், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத வரையில் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

7. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று கழகத்துக்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும் பொறுப்பு விடுவிக்கப்படுதலும் வேண்டும் என்பதுடன் அந்நாளன்று கழகத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் கழகத்திற்குச் செலுத்தப்படற்பாலதான ஒப்பப்பணங்களும் கடமைப்பொறுப்புகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும். **கழகத்தினால் செலுத்தப்படவுள்ள தனிசுகளும் கழகத்திற்கு வருமதியான தனிசுகளும்.**

8. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவின், மானியக் கொடையின், கொடையின் இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் வாயிலாக அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கப்படக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்கள் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கான முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும். **அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.**

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கௌரவப் பொதுச் செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன் கௌரவ பொதுச் செயலாளரினதும் ஒன்றில் தலைவர் அல்லது கௌரவப் பொருளாளரின் முன்னிலையிலன்றி, ஏதேனும் சாதனத்தில் பொறிக்கப்படலாகாது. அவர்கள் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும். **கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.**

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் குடியரசின் உரிமைகளை யேனும், அல்லது ஏதேனும் அரசியற் குழு அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள் மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளை யேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

11. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,843 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 263, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.